# நாட்டு விடுதலையில் நாட்டமிருந்தால் பெண்களை முன்னேறவிடுங்கள்

## பெண்களை இழிவுபடுத்தும் பேதமையை முறியடிப்போம்

## சுயநலமிகளின் சொத்தைவாதங்களுக்கு அஞ்சோம்

## சென்னையில் மாதர்களிடையே புத்துணர்ச்சி

(0)

## இந்து சட்டத்திருத்த மசோதாவுக்குப் பெண்கள் ஆதரவு

(0)

## பெண்கள் மாநாட்டு நிகழ்ச்சி விவரம்

சென்னை, ஏப். 13—

ஆயிரத்துக்கு அதிகமான பெண்கள் ஆர்வத்தோடு கூடினர் கோகலே மண்டபத்தில்; சட்ட மந்திரி தோழர் அம்பேத்கார் கொண்டுவந்துள்ள இந்து சட்டத்திருத்த மசோதாவுக்குத் தங்களின் ஒருமனதான ஆதரவைத் தெரிவிக்கவே மாநாடு கூடினர் திராவிடத் தாய்மார்கள். மூற்போக்கு மனம்படைத்த தோழர்கள், பெண்ணுரிமைக்கு ஆதரவு தரும் ஆண்கள், மாநாட்டுச் சொற்பொழிவுகள் கேட்கத் தனியிடம் ஒதுக்கித் தரப்பட்டிருந்தார்கள்!

இந்து சட்டத்திருத்த மசோதாவுக்குத் திராவிடத் தாய்மார்களின் முழு ஆதரவு இருக்கிறதென்பதைத் தோழர் அம்பேத்காருக்கு அறிவிக்கத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூட்டப்பட்ட பெண்கள் மாநாடு, நேற்று மாலை 4 மணிக்குக் கோகலே மண்டபத்தில் கூடிற்று.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநாடு கூட்டப்பட்டாலும், பெண்களைப் பற்றியதால் கட்சி வேறுபாடில்லாமல் தாய்மார்களெல்லாம் கலந்துகொள்ள வேண்டுமென்றும், எல்லோரும் ஒருமுகமாக நின்று போராடவேண்டுமென்றும் தருமாம்பாள் தம்முடைய வரவேற்புரையில் கூறினார். "சேலைகட்டிய மாதரை நம்பினால் நடுத்தெருவில் நிற்பரே" என்றெல்லாம் சுயநலமிகள் நம்மைப்பற்றி எழுதிவைத்திருக்கிறார்கள்; நான் கேட்கிறேன் எத்தனை ஆண்கள் நம்மை நம்பி நடுத்தெருவில் நிற்கிறார்கள்! மற்றும் பெண்களை அறிவு வளர்ச்சிக்கான பொதுக்கூட்டங்களுக்கு அனுப்புவதில்லை; செய்தித்தாள் படிக்க விடுவதில்லை; கேட்டால் பெண் கெட்டுவிடுவாள் என்று கூறுகிறார்கள். ஜப்பானைப் பாருங்கள், ரஷியாவைப் பாருங்கள் பெண்கள் முன்னேற்றம் நாட்டு முன்னேற்றமாகும்; ஆகையால், நாடு முன்னேற எங்களை முன்னேறவிடுங்கள்" என்று டாக்டர் தருமாம்பாள் கூறினார்.

இந்து சட்டத்திருத்த மசோதா உண்மையில் பெண்களுக்குச் சகல உரிமைகளும் கொடுக்கும் மசோதாவாகாது ஏதோ தலை நோய்க்குத் தைலம் தடவுவதுபோல. சரிந்து கொண்டிருக்கும் சுவற்றுக்குச் சாந்துதடவுவது போன்றதாகும். இந்த மசோதாவே எதிர்க்கப்படுமானால், சுயநலமிகளின் கோட்டையைத் தவிடுபொடியாக்கிவிடுவோம். சனாதனத்துக்குச் சிறிதும்பயப்படோம், பூரண ஆதரவு தோழர் அம்பேத்காருக்குத் தருகிறோம்" என்று டாக்டர் தருமாம்பாள் கூறினார்.

மாநாட்டுத்தலைவர் தோழியர் ராமாமிர்தத்தம்மையாரையும், திறப்பாளர் தோழியர் வெற்றிச் செல்வி அன்பழகன் அவர்களையும் வரவேற்று டாக்டர் தர்மாம்பாள் அழகிய சொற்பொழிவாற்றினார் (முழு சொற்பொழிவு வேறு பக்கம் காண்க).

மாநாட்டு அமைப்பாளர் தோழியர் அலமேலு அப்பாதுரை மாநாட்டு நோக்கத்தைப்பற்றி விளக்கிப் பேசினார். இந்து சட்டத் திருத்த மசோதா பெண்ணுக்குச் சொத்துரிமை, விதவை விவாகம், பதிவுத் திருமணம் ஆகியவற்றைச் சட்ட பூர்வமான தாக்கத்தான் இம்மசோதாவை டாக்டர் அம்பேத்கார் கொண்டுவந்திருக்கிறாரென்றும், பெண்கள் மனப்பூர்வமான ஆதரவு தரவேண்டியது மிக அவசியமென்றும் அவ்வம்மையார் கேட்டுக்கொண்டார். சனாதனிகளும், பிற்போக்குப்பெண்களும் மசோதாவை எதிர்த்ததைக் கண்டித்து, மாநாட்டிற்குத் தோழியர் மூவாலூர் ராமாமிர்தத்தம்மையாரைத் தலைமைதாங்கி நடத்தும்படி கேட்டுக்கொண்டு முன்மொழிந்தார்.

பெண்கள் விழிப்புணர்ச்சி பெறவேண்டுமென்று அச்சுறுத்தித் தோழியர் எம். ராஜம் எடுத்துக் கூறித் தோழியர் ராமாமிர்தத்தம்மையாரைத் தலைமைதாங்கும்படிக் கேட்டுக்கொண்டு பின்மொழிந்தார்.

பலத்த கைதட்டலுக்கிடையே தோழியர் மூவாலூ

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Phone No 4502 — Regd. No. M. 5458

விலை அரை அணா — இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர் C.N. அண்ணதுரை M.A. — MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1] சென்னை (14-4-50) வெளியூர் (15-4-50) [ இதழ் 224

## குமாவன் எக்ஸ்பிரஸ் கவிழ்ந்தது

### 50 பேர் கொல்லப்பட்டனர்; 75 பேர் காயமுற்றனர்

### நாசவேலையே காரணம் என்று கருதப்படுகிறது

பெரில்லி, ஏப். 12—

பிட்ராய்க்கும்கச்சாலாவுக்குமிடையே காலை 1-40 மணிக்கு அவுத்-திர்ஹட் ரயில்வேயின் ஓடும் குமாவன் எக்ஸ்பிரஸ் தண்டவாளத்தைவிட்டு இறங்கிவிட்டது இதன் விளைவாக 50 பேர் கொல்லப்பட்டனர்; 75 பேர் காயமுற்றனர்.

எஞ்சினும் 5 வண்டிகளும் தண்டவாளத்தைவிட்டு இறங்கி அடுத்துள்ள வற்றிபோயிருந்த ஆற்றில் உருண்டன. எஞ்சின்டிரைவர் பலத்த திப்புண்காயங்களுக்காளானார். இறந்தவர்களில் பயர்மென்னும் ஒருவராவார்.

இந்த ரயில் விபத்துக்குக் காரணம் நாசவேலையே என்று ரயில்வே அதிகாரி ஒருவர் கருதுகிறார். அருகிலிருந்த ஒரு சிறு பாலத்தருகே தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டிருந்ததிலிருந்தே இது நாசவேலையின் விளைவு என்று சொல்லப்படுகிறது.

விபத்து நேர்ந்த இடத்திற்கு மருத்துவர்கள், நர்சுகள் அடங்கிய ஆம்புலன்வண்டி விரைந்துவந்தடைந்தது.

இறந்தவர்களையும், காயமடைந்தவர்களையும் அவ்விடம் விட்டு அகற்றும்வேலை உடனே ஆரம்பிக்கப்பட்டது.

1950-ம் ஆண்டில் இதுவரை 3 பெரும் ரயில் விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஜனவரி 15-ல் ஈ. ஐ. ரயில்வேயில் மொகல்சேரை-ஷரான்பூர் பகுதியில் ஹர்டோய்க்கருகில் சாமான்கள் ஏற்றிச் செல்லும் வண்டி கவிழ்ந்ததன் விளைவாக 6 பேர் கொல்லப்பட்டனர். இருவர் காயப்பட்டனர்.

ஜனவரி 29-ல் அம்பாலாவுக்கு 30 மைல் தொலைவில் காஷ்மீர் மெயில் விபத்து காரணமாக இராணுவத்தைச் சேர்ந்த 34 பேர் உட்பட 63 பேர் கொல்லப்பட்டனர் 62 பேர் காயப்பட்டனர்.

மார்ச் 4-ல் குளூர்பேட்டைக்கருகில் கல்கத்தா மெயில் கவிழ்ந்ததன் விளைவாக 6 பேர் கொல்லப்பட்டனர். 85 பேர் காயமுற்றனர்.

## பெவினுக்கு :: :: ஆபரேஷன்

லண்டன், ஏப். 13—

பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி பெவினுக்கு ஒரு சிறு ஆபரேஷன் செய்யப்பட விருக்கிறதென்றும் அனேகமாக இன்று நடைபெறலாம் என்றும் தெரிகிறது. அவருடைய பொது உடல் நிலைமாத்தி கவலைப்பட ஏதுவுமில்லை என்றும் கூறப்படுகிறது.

அவர் ஆஸ்பத்திரியிலேயே காரியதரிசிகளுடன் நிர்வாக விஷயங்கள் பற்றி கலந்து பேசியதுடன் பைல்களை எல்லாம் கவனித்தாராம்.

பத்து நாட்களில் இவர் தன் முழு அலுவல்களையும் கவனிக்க முடியும் என்று கூறப்படுகிறது.

## ஆரியமாயை வழக்கு

திருச்சி, ஏப். 12—

'ஆரியமாயை' நூலை எழுதியதற்காக அதன் ஆசிரியர் தோழர் சி. என். ஏ. அவர்கள் மீதும், பதிப்பகத்தார்கள், வெளியிட்டவர்கள் ஆகியோர் மீதும் திருச்சி சப் டிவிஷனல் கோர்ட்டில் தொடரப்பட்டிருக்கும் வழக்கு, இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சப்-இன்ஸ்பெக்டருக்கு சம்மன் சார்வாகாததினால், மீண்டும் வழக்கு 24-4-50-ம் நாளன்று ஒத்திப்போடப்பட்டது. (ந நி.)

## எளிதில் ஆங்கிலம் கற்க ஏற்பாடு

கேப்டவுன், ஏப். 13—

ஆப்பிரிக்காவிலுள்ள வாண்டேக்கள் எளிதில் ஆங்கிலம் கற்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. தினம் ஒரு மணி வீதம் 6 மாதத்தில் ஆங்கில மொழியை எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டுவிடலாமாம். (ஜுபோர்)

## பதில் சொல்ல அவகாசம் வேண்டுமாம்!

(0)

## லாட்வியா விமானச்சண்டைபற்றி யு. எஸ். தீர்மானம்

வாஷிங்டன், ஏப். 13—

லாட்வியாமீது ரஷ்யா விமானத்தை அமெரிக்க விமானம் சென்ற சனிக்கிழமையன்று சுட்டது என்று ரஷ்யா புகார் செய்து அனுப்பியுள்ள கண்டனக் குறிப்புக்கு பதிலளிக்க யுனைடெட் ஸ்டேட்ஸ் தனக்கு வேண்டிய அவகாசத்தை எடுத்துக்கொள்ளுவதென்று தீர்மானித்திருக்கிறது.

இதற்குப் பதில் அனுப்புமுன் நடந்த விஷயங்கள் பற்றி தகவல் அறிய பாதுகாப்பு இலாகா எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளின் முடிவு தெரிந்தாக வேண்டியது அவசியம் என்று, யுனைடெட் ஸ்டேட்ஸ் ராஜாங்க மந்திரி டீன் அகீஸன் கூறினார்.

பால்டிக்மீது பறந்து சென்ற அமெரிக்க ராணுவ விமானம் என்னவாயிற்று என்பது பற்றி எவ்வித தகவலும் கிடைக்கவில்லையாம்.

விமானச் சண்டை ஏற்பட்டது உண்மையில் ரஷ்யப்பிரதேசத்தில்தானா என்பதே அமெரிக்காவில் சந்தேகிக்கப்படுகிறது.

மறைந்த விமானத்தைத் தேட வேயன் ஹேரனிலிருந்து 20 விமானங்களைப் பல திசைகளில் அனுப்பப்படும் என்று கூறப்படுகிறது.

## ஆப்கன் சர்க்காரைக் கவிழ்க்க சதி

பெஷாவர், ஏப். 13—

ஆப்கன் சர்க்காரைக் கவிழ்க்கவும், ஆப்கன் பிரதமரைக் கொல்லவும் சதி செய்ய முயற்சிக்கப்பட்டதாக செய்தி இன்று கிடைத்திருக்கிறது.

இச்சதிவேலையைச் செய்து முடிக்க மார்ச் 1-ம் தேதி நிர்ணயிக்கப்பட்டிருந்ததாம்.

ரகசியப் போலீஸார் இதை எப்படியோ கண்டுபிடித்துவிட்டார்கள்.

சதிவேலைக்குத் திட்டம் போட்டவர்கள் ஆப்கன் எல்லையைத் தாண்டி ரஷ்யாவுக்குச் சென்றுவிட்டதாகத் தெரிகிறது.

உள்ளூர் சதிகாரர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்து தாண்டியவர்கள் அப்துல்காட்டு ஜெனரல் என்று உத்யோகப் பூர்வமா[illegible] அறிக்கையொன்று கூறுகி[illegible] ஏராளமான பேர் கைது செ[illegible]பட்டிருப்பதாகவும் கூறப்படுகி[illegible]

([illegible]

# மாலை மணி

சென்னை 14—4—50 வெள்ளிக்கிழமை


## பெண்கள் மாநாடு

பெண்ணுலகம் விழிப்புணர்ச்சிகொண்டு வீறிட்டெழத் தொடங்கிவிடுமேயானால், அதனைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் இந்த அவனியிலே எதுவும் இருக்க முடியாது!

மன்னாதி மன்னர்கள்முதல், மடத்து ஆண்டிவரையில் மங்கையரின் தாளடியிலே இறுதியில் வீழத்தான் செய்திருக்கிறார்கள் தனிப்பட்ட முறையில் என்பதை, வரலாறு நன்கு எடுத்துக்காட்டி வந்திருக்கிறது. ஆடவரை அடிபணிய வைக்கும் வசீகர ஆற்றல், பெண்ணினத்தின்பால் அமைந்திருந்தாலும், கூட்டுப் பொது வாழ்வில், பெண்கள் ஏமாற்றப்பட்டு, அடிமைப் படுத்தப்பட்டே வந்திருக்கிறார்கள். அதற்கு அவர்களின் அறியாமையே முக்கிய காரணமாக இருந்திருக்கிறது; அத்தகைய அறியாமை அவர்களிடத்துஎன்றென்றும் இருக்கவேண்டும் என்பதே வன்னெஞ்சம் படைத்த ஆடவர் சிலரின் நோக்கமாகவும் இருந்து வந்திருக்கிறது. பெண்ணுலகம் இதுநாள்வரையில் அடிமைப்பட்டிருந்ததற்கு ஆற்றல் குறைவு அல்ல காரணம், அறியாமைதான் என்பது இப்பொழுது உலகிற்குத் தெளிவாக விளங்கத் தொடங்கி விட்டது. அவர்களின் விடுதலை வேட்கைக் குரலோசை உலகெங்கும் இற்றை நாளில் கேட்பதே போதிய சான்றாகும்.

விடுதலை வேட்கையால் உந்தப்பட்டு, எழுச்சியுற்ற பெண்கள் ஈட்டத்தின் தோற்றம் எப்படியிருக்கும் என்பதை 12—4—50 புதன்கிழமையன்று, சென்னை கோகலே மண்டபம் அழகுற விளக்கிக் காட்டியது. அங்குதான்—அன்றுதான் திராவிடத்தின் எழுச்சியுற்றப் பெண்கள் கூடினர் தங்கள் ஏக்கத்தைப் போக்கிக்கொள்ள—தங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் இழிவை நீக்கிக்கொள்ள-அடிமை நிலைமை மாற்றிக்கொள்ள!

திராவிடத்தின் வீராங்கனையர்—ஆவேசத் தாய்மார்கள் கோகலே மண்டபத்தில் கூடினர்—வீர முழக்கமிட்டனர்—ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அடிமைப்படுத்திவைத்திருக்கும் வஞ்சக வைதிகர்களைச் சாடினர்—ஏமாற்றி வரும் எத்தர்களைச் சவாலுக்ழைத்தனர்—சனாதனிகளைச் சமருக்குக் கூப்பிட்டனர்—ஆண்—பெண் சம உரிமை கோரி நிற்கும் பேரறிவாளர்களுக்குப் பாராட்டு வழங்கினர்—தங்கள் மீது நூற்றாண்டு காலமாகச் சுமத்தப்பட்டிருக்கும் அடிமை சாசனத்தை ஓரளவுக்குக் கிழித்தெறிய முற்பட்டிருக்கும் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் முயற்சிக்கு ஆதரவு காட்டினர். அடிமை நிலையை மாற்றவும், விடுதலை பெற்று ஆண்களோடு தாங்களும் சரி நிகர் சமானமாக வாழவும் எந்த அளவுக்கு உணர்ச்சிகொண்டெழுந்துள்ளனர் என்பதற்கு, கோகலேமண்டபத்தில் கூடிய பெண்கள் மாநாடு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிற்று.

பெண்களுக்கு அதிக உரிமைகள் வழங்கும் நோக்கத்தோடு, டாக்டர் அம்பேத்கார் அவர்களால், இந்தியப் பாராளு மன்றத்தில் கொண்டுவர இருக்கும் இந்து சட்டத் திருத்த மசோதாவிற்குத் தங்கள் முழு ஆதரவு உண்டு என்பதை அறிவிப்பதற்கும், அந்த மசோதாவை எவ்வகையிலும் தரத்தைக் குறைக்காமல் அப்படியே கொண்டு வந்து நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வந்து நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வந்து தீரவேண்டும் என்பதை வற்புறுத்தவும், பெண்கள் திராவிடப் பகுதியைச் சேர்ந்த பெண்கள் மாநாடு கூடினர். அம்மாநாட்டைக் கூட்டிவைக்கும் பெருமுயற்சியை, பெண்களின் முன்னேற்றத்திற்கு எல்லாவகையிலும் பாடுபட்டு வரும், திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக் கொண்டு, வெற்றிகரமாக முடித்தும் தந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடந்த அந்த மாநாட்டில் கழகத்தைச் சார்ந்த பெண்களும், சாராத பெண்களும் பெரும் அளவில் பங்கு கொண்டு மாநாட்டின் நோக்கத்தை வெற்றியுறச்செய்ய பெரிதும் துணையாக இருந்தது மிகவும் போற்றுதற்குரிய செயலாகும்.

இதுவரையில் சென்னையில் நடைபெற்றப் பலபெண்கள் மாநாட்டைக் காட்டிலும்; பெரும்பாலான பெண்களின் பிரதிநிதித்வம் வாய்ந்தமாநாடாக இந்த மாநாடு இருந்ததே மாநாட்டின்வெற்றிக்குச் சிறந்த அறிகுறியாகும், சென்னையைச் சேர்ந்தவர் மாத்திரமல்லாது வெளி மாவட்டங்களிலிருந்தும் பெண்கள் வருகை தந்திருந்தது, பெண்ணுலகம் இந்த நாட்டில் விழிப்புணர்ச்சி பெற்றுவிட்டது. என்பதைக்காட்டும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய பிறகு கூடும் முதல் பெண்கள் மாநாடாக இது இருப்பது மட்டுமல்லாமல், மிகக் குறுகிய கால விளம்பரத்தில் கூட்டப்படுவதாக இருந்தும், பெருந்திரளான பெண்கள் கலந்து கொண்டதும், அரிய தீர்மானங்கள் நிறைவேற்றியிருப்பதும், தாய்மார்கள் பெருமித உணர்வோடு கலந்து கொண்டிருப்பதும், மிகச் சிறப்புகளோடு வெற்றிகரமாக முடிந்திருப்பதும் பெண்ணுலகம் கழகத்திற்கும், அது கொண்டிருக்கும் முற்போக்குக் கொள்கைகளுக்கும் எவ்வளவு ஆதரவு கொடுக்கக் காத்திருக்கிறது என்பது இனிது விளங்கும்.

திராவிடத்தின் மூதாட்டியும் பெண்கள் விடுதலைக்குப் பல ஆண்டுகளாக உழைத்து உழைத்து உருக்குலைந்துவிடும் வைர நெஞ்சம் படைத்த வீராங்கனையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர் படையிலே சேர்ந்திருப்பவருமான மூவாலூர் இராமாமிர்தத்தம்மையார் ஆற்றியிருக்கும் தலைமைச் சொற்பொழிவு பெண்ணுலகைமட்டுமல்ல, ஆணுலகையும் தட்டி எழுப்பும் தன்மையதாகும். திராவிடத் தாய்மார்களுக்கு அவர்கள் கூறியிருக்கும், கருத்து ஒவ்வொன்றும் சிந்தை தெளியவைக்கும் அருமருந்தாகும்.

பெண்ணுலகம் வீழ்ச்சியுற்ற வரலாற்றையும், அது எழுச்சிபெறவேண்டிய வகையையும் தோழியர் வெற்றிச் செல்வி அன்பழகனார் அவர்கள் தெள்ளத்தெளிய விளக்கிக்காட்டியுள்ளார்கள்,

வரவேற்புரை வழங்கிய அவர்கள் பெண்களின் அவல நிலையை விளக்கிக்காட்டி, அவர்களின் ஆற்றல் எத்தகையது,எதை எதைச் செய்பவல்லது என்பதைத் தமது உரையில் தெளிவுபடுத்தியிருப்பது போற்றிப் பாராட்டுவதற்குரியதாகும்.

மாநாட்டின் அமைப்பாளராக விளங்கி, மாநாட்டை வெற்றிகரமாக முடிக்க அரும்பாடுபட்ட தோழியர் அலமேலு அப்பாத்துரை அவர்களின் தொண்டு பாராட்டி, மகிழ்வதற்குரியதாகும்

நாட்டில் அறிவுப் பிரசாரம் புரிந்து பொதுவாக மக்களிடத்திலும், குறிப்பாகப் பெண்களிடத்திலும் குடி புகுந்திருக்கும் மூட நம்பிக்கைகளையும், குருட்டுப் பழக்க வழக்கங்களையும் போக்குவதென்று தீர்மானத்தின் மூலம் முடிவுக்கு வந்திருப்பது வரவேற்று மகிழ்ச்சியடையத் தக்கதாகும். டாக்டர் அம்பேத்கார் மசோதாவுக்கு ஆதரவு காட்டியிருப்பதுடன், அதை எதிர்த்து நிற்கும் எத்தர்களைக் கண்டித்து வெறுத்தொதிக்கியுள்ளார்கள். இப்படிப்பட்ட துணிவோடு செயலாற்ற முன்வந்த வீராங்கனையர் அனைவரையும் நாம் மனதாரப் பாராட்டி, வரவேற்புக் கூறி, வாழ்த்துகிறோம். அவர்கள் முயற்சி வெல்க என்றுவீர முழக்கமிட்டுக் கூறுகிறோம்.

சென்னையில் பெண்கள் மாநாடு கூடி இந்து சட்டத்திருத்த மசோதாவுக்கு ஆதரவு தந்திருப்பது, திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பெருமைக்குரிய செயல் என்பது மட்டுமல்லாமல், சென்னைமாநிலத்திற்கே பெருமை தரக் கூடிய நிகழ்ச்சியாகும்!

**வெல்க பெண்கள் மாநாட்டின் நோக்கம்!**

---

### கண்டக்டர் கண்ட புதுமை!

லண்டன், ஏப். 13—

ஒரு லண்டன் பஸ் கண்டக்டர் தன்னிடமுள்ள சில்லரைகளில் உள்ள 3 பென்ஸ் நாணயம் ஒன்றில் ஒரு கோடு இருப்பதைக் கண்டார். அதை, கைகளால் அழுத்தவே அது இரண்டாகி ஒரு லாக்கெட் மாதிரி இருந்ததைக் கண்டார். இதற்குள் ஒரு பெண்ணின் படம் இருந்தது. இப்பொழுது இந்த லாக்கெட்டுக்குரிய பெண்ணை அக்கண்டக்டர் தேடிக்கொண்டிருக்கிறார்.

---

## நாட்டு விடுதலையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராமாமிர்தத்தம்மையார் மாநாட்டுத் தலைவருக்காகப் போடப்பட்டிருந்த இடத்தில் வந்தமர்ந்தார்.

தோழியர் வெற்றிச்செல்வி அன்பழகன், மாநாட்டைத் திறந்துவைத்துப்பேசுகையில், இளம் பெண்கள் உலகம் முற்போக்குப் பாதையில் செல்லவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி, சனாதனம் சல்லடம்கட்டுவதை எதிர்த்துச் சுமார் ஒரு மணி நேரம் பேசினார். (சொற்பொழிவு பின்னர்வெளிவரும்)

பெண்கள் சமுதாயத்துக்காக உழைத்து உழைத்து உருக்குலைந்துபோன உடல்; நரைத்ததலை; சுருக்கம்விழுந்த முகம் வெள்ளுடை அணிந்திருந்த அம்மையார் வேதனையோடு கூறினார். "40 ஆண்டுகளாகச் சுயமரியாதையை வளர்க்க-முக்கியமாகப் பெண்கள் சமூகத்தின் முன்னேற்றத்துக்காக உழைத்துவருகிறேன் ஆனால் பயன் அதிகம் கிட்டவில்லை. இன்றுதான் பெண்களின் முன்னேற்றத்துக்காக ஒரு சட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது. இச்சட்டம் மிகவும் அவசியமானது தேவையானால் கிளர்ச்சி செய்யுங்கள் இல்லாவிட்டால் சொல்லிவிடுங்கள்; நானாவது தீய் வெட்டுக்கொள்கிறேன்."

"ஒத்துழைக்கிறோம்" என்று கூறும் தோரணையில், கூடியிருந்த தாய்மார்கள் பலமாகக் கைதட்டினார்கள். உடனே வந்துவிட்டது ஆவேசம் அம்மையாருக்கு ஒரு மணிநேரம் ஓயாது பேசினார்; உயர்ந்த கருத்துகளைச் சிந்தினார், 'அவனை செய்யாவிட்டால். அடிபூசமாட்டோம், என்று தாய்மார்கள்" அறப்போர் தொடுக்கவேண்டுமென்று கூறினார். (முழு சொற்பொழிவு பின்னர் வரும்)

பின்பு பல தோழியர்கள், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப்பற்றி விளக்கமாகப் பேசினார்கள்.

தோழியர்.ஜோதீஸ்வரி அம்மையார் பேசுகையில், குடும்பமென்னும் வண்டியை புருடன் மனைவி என்னும்இரண்டு எருதுகளால் இழுக்கப்படுகின்றனவென்றும், மாறுபட்ட கருத்திருந்தால் வண்டி நகராதது மட்டுமல்ல, உடைந்து சுக்கலாகி விடுமென்றும்-ஆகையால் ஆணுக்கு இருப்பது போலவே பெண்ணுக்கும் உரிமைகள் இருக்கவேண்டுமென்றும் கூறினார்.

தோழியர் எம். ராஜம் பேசுகையில் பெண்கள் கொடுமைகளுக்கு ஆளாகியுள்ளனரென்றும், பெண்கள் சகிப்புத்தன்மை கொண்டவர்களாகையால்.என்றும்தோல்வியடையமாட்டார்களென்றும், ஆதலால் இந்துமத சட்டத்திருத்த மசோதவை மனப்பூர்வமாக ஆதரிக்க வேண்டுமென்றும் கூறினார். உடன் கட்டை ஏறும் பழக்கத்தைத் தடுக்கச் சட்டம் செய்ய ராஜாராம் மோகன்ராய் முயன்றபோதும் சனாதனிகள் எதிர்த்தார்களென்றும், அவர்கள் முறைக்கு-கேமுடிக் கட்டைகளென்றும் பேசினார்.

தோழியர் ருக்மணியம்மாள் பேசுகையில், 'அடுப்பூதும் பெண்ணுக்குக் கல்வியா' என்னும் பழமொழி நாட்டில் உலவுகிறதென்றும், இதைப் பொய்யாக்கப் பெண் சமூகம் கல்வி கற்க வேண்டுமென்றும் கூறினார். ஆண் புலவர்களுக்கு ஈடாகப் பெண் புலவர்கள் இருந்திருக்கிறார்களென்றும், பெண்கள் எந்த விதத்திலும் ஆண்களுக்குத் தாழ்ந்தவர்கள் இல்லையென்றும் கூறினார்.

தலைவர் முடிவுரையில் தாய்மார்கள் தாலாட்டுவதில் கூட சீர்திருத்தம் இருக்க வேண்டுமென்றும், இழிவான சடங்குகளை ஆதரிக்கக் கூடாதென்றும் அறிவுரை கூறினார். குழந்தை, தாயிடமே வளருகின்றகாரணத்தால்,தாய்கற்றவளாக இருந்தால் குழந்தைகளின் கல்வி வளருமென்று அவ்வம்மையார் அறிவித்தார்.

அமைப்பாளர் தோழியர் அலமேலு அப்பாதுரை நன்றி கூறலுடன் இரவு 7-30 மணிக்கு மாநாடு இனிது முடிந்தது.

மாநாட்டில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களெல்லாம் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டன தீர்மானங்களுக்கு ஆதரவு கைதட்டல் மூலம் தெரிவிக்கப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட இந்துச் சட்டத்திருத்த மசோதா ஆதரிப்புத் தீர்மானம், உடனே தந்தி மூலம் சட்டமந்திரி டாக்டர். அம்பேத்காருக்கு அனுப்பப்பட்டது.

### தீர்மானங்கள்

1. சமுதாய அமைப்பு முறையினாலும், பழையகால சம்பிரதாயங்களினாலும், அந்தச் சம்பிரதாயங்களை யொட்டித் தொகுக்கப்பட்டு அமுலிலிருக்கும் சட்டத்தினாலும், பெண்கள் உரிமையற்றவர்களாய், ஆடவரின் ஆதிக்கத்துக்கு இரையாகித் தீரவேண்டிய கொடிய நிலைமையில் தள்ளப் பட்டவர்களாய் ஆக்கப்பட்டிருப்பதால், உரிமை உணர்ச்சியும், விடுதலை உணர்ச்சியும் மேலோங்கியுள்ள இந்த நாட்களிலாவது, பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைத் துடைத்து,அவர்களுக்கு முழு உரிமை கிடைக்கும்படியான வழிவகைகளைச் செய்ய முன்வரவேண்டுமென்று சர்க்காரையும், முற்போக்குக் கொள்கைகொண்ட கட்சிகளையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிந்தவர்: தோழியர்.எஸ் ஜே தீஸ்வரி அம்மையார், பின்மொழிந்தவர்:தோழியர் ராஜாமணி ராஜாராம்.

2. பெண்களின் உரிமைக்காக எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிகளுக்கும், கிளர்ச்சிகளுக்கும் தாராளமான முறையில ஆதரவு காட்டவேண்டுமென்று நம்நாட்டு பத்திரிகை ஆசிரியர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்: தோழியர் மலர் முகத்தம்மையார், பின்: தோழியர் என். கண்ணமமாள்.

3. தற்போது சட்டமந்திரி டாக்டர் அம்பேத்கார் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்து சட்டதிருத்த மசோதா, பெண்களுக்கு இன்றுள்ளதாழ்நிலையைப் போக்கவும், குறிப்பிடத்தக்க அளவு உரிமை வழங்கவும் பயன்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

# இருண்ட வாழ்வில் இருந்தது போதும் எழுச்சிகொள்வீர்!

## சூது நெஞ்சத்தினரின் சூழ்ச்சிகளை தகர்த்தெறிந்திட வாரீர்!

## இந்து சட்ட திருத்த மசோதாவுக்கு ஆதரவு தாரீர்

### பெண்கள் மாநாட்டில் டாக்டர் தருமாம்பாள் அவர்கள் ஆற்றிய வரவேற்புரை

மாநாட்டுப் பிரதிநிதிகளே! மற்றுமுள்ள தோழியர்களே!!

இந்த நாட்டுச் சமுதாயத்தில், பெரும்பகுதிப் பிரிவினராக விளங்கும் பெண்களாகிய நாம், மாநாடு கூடியுள்ளோம். இது, சமுதாயத்தில் வலிவற்றப் பகுதியாக இதுநாள் வரையில் கருதப்பட்டு வந்த பெண்ணினம், விழிப்புணர்ச்சி பெற்று எழுந்து விட்டது என்பதை உலகோர்க்கு அறிவிக்கும் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு—முக்கியமான நிகழ்ச்சி ஆகும். மாநாட்டின் இன்றியமையாத தன்மையையுணர்ந்து, இதில் கலந்துகொண்டுள்ள உங்கள் அனைவரையும் காண நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். மாநாட்டில் கலந்துகொண்டு தாம் சிறப்படைய வேண்டியும், மாநாட்டினைச் சிறப்பிக்க வேண்டியும், பெருமித உணர்ச்சியோடும், பூரிப்போடும் இங்கு கூடியுள்ள உங்களை — சமுதாயத்தின் தாய்மையாக விளங்கும் உங்களை வருக வருக என வாயார வரவேற்று, மனமார்ந்த மகிழ்ச்சியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருண்ட வாழ்விலே இதுவரையில் வைக்கப்பட்டிருந்த பெண்ணினம் விடுதலைபெற்று வீறிட்டெழ உலகெங்கும் துடித்துக் கொண்டிருக்கிறது. பல நாடுகளில் பெரும் அளவுக்கு வெற்றியும் கிடைத்துள்ளது. பெண்களைச் சமுதாய வாழ்வில் நிரந்தர அடிமையாக—பிறவி அடிமைகளாக ஆக்கிடும் கொடுமை, இந்நாட்டில் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகச் சட்டத்தின்பேராலும், சாஸ்திரத்தின் பேராலும், ஆண்டவன்பேராலும், அவதாரங்களின் பேராலும் நடைபெற்றுவருகிறது. அக்கொடுமையினின்றும் பெண்ணினத்தை விடுவிக்கும் பொருட்டே நாம் இங்கு கூடியுள்ளோம்.

பெண்ணினத்தைப் பழிப்பதையே தம் கொள்கையாகக் கொண்ட பித்தர்கள் எழுதிய சாஸ்திரங்களை, அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்துச் சட்டம், இந்த நாட்டை ஆண்டுவருகிற காரணத்தால், பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளுக்கு அளவே இல்லாமலிருந்துவருகிறது. பெண்ணினத்திற்கு விடுதலை வாங்கித்தரவேண்டியது அவசியமாகும் என்பதை உணர்ந்த நேர்மையாளர்கள், இந்நாட்டில்தோன்றியதன் பிறகு பெண்ணடிமை போக்கும் பிரசாரமும், செயலும் ஓரளவுக்கு நடைபெறத் தொடங்கலாயிற்று. பெண்ணினமும் சிறிது விழிப்புணர்ச்சிகொண்டு எழுந்தது. அந்த அரும்பிய உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, இந்துச்சட்டத்தினால் இழைக்கப்பட்டுள்ள கொடுமைகளை ஓரளவுக்காவது நீக்கவேண்டும் என்று கருதி டாக்டர் அம்பேத்கார் போன்ற அறிஞர்களின் அரிய முயற்சியால் இந்துச் சட்டத் திருத்த மசோதா இன்று இந்திய பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. அந்த முயற்சி மகிழ்ச்சிக்குரியது—பாராட்டத்தக்கது—பெருமைகொள்ளுவதற்குரியதாகும். பெண்களுக்குச் சமுதாயத்தினால் இழைக்கப்பட்டுவரும் கொடுமைகள் அனைத்தையும் அந்த மசோதா போக்கிவிடவில்லை என்றாலும், நாம் பெருமையடையும் அளவுக்கு பூரிப்புகொள்ளும் நிலைமைக்கு அது அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இந்துச்சட்டம், பெண்களை இதுவரையில் அடிமைகளாகத்தான் கருதிவருகிறது. பெண்களை சிறிதளவு பெண்களாகவே—மனித இனத்தைச் சேர்ந்தவர்களாகவே கருதும் நிலையில் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. திருத்தப்பட்ட சட்டம் நிறைவேற்றப்பட வேண்டி பாராளும் மன்றத்தின் வாயற்படியில் காத்துக்கொண்டு நிற்கிறது. இந்நிலையில் அந்தத் திருத்தச் சட்டத்தை அழித்துவிட வைதிகப் புயல் வீசுகிறது—சனாதனச் சேரியிலிருந்து வஞ்சக நரிகள் ஊளையிட்டவண்ணம் இருக்கின்றன. சூதுநெஞ்சினர் திருத்தச் சட்டத்தை அமுலாக்காதபடி செய்ய என்ன என்ன சூழ்ச்சிகள் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்துவருகின்றனர்—செய்யவும் எண்ணமிட்டுக்கொண்டிருக்கின்றனர். பெண்ணினத்தை என்றென்றும் அடிமையாகவே வைத்து வாழவேண்டும் என்று எண்ணும் ஆண் இனத்தைச் சேர்ந்த வஞ்சகர்கள் சிலரும், அவர்களின் வஞ்சக எண்ணத்தை அறிந்துகொள்ள மாட்டாத பேதைமைப் பெண்கள் சிலரும் கூப்பாடு போட்டு வருகின்றனர். அறிவுடைப் பெண்ணுலகம், மாக்களாக இராமல மக்களாகவே வாழ ஆசைப்படும் பெண்ணுலகம் இந்த இந்துச் சட்டத் திருத்த மசோதாவிற்கு முழு ஆதரவையும் காட்டுகிறது என்பதை அரசியலார்க்கும், முற்போக்குக் கொள்கை படைத்தோர்க்கும் அறிவிக்கவும், சட்டத்தைத் தடைசெய்ய காத்துக்கொண்டிருக்கும் பெண்ணின் பெருமை யறியாத கபோதிகளைக் கண்டித்து ஒதுக்கவும் நாம் இங்கு கூடியுள்ளோம். நாம் இங்கு எழுப்பும் எழுச்சிக் குரல், நாடெங்கும் கேட்கவேண்டும்—உறங்கிக் கிடக்கும் பெண்களை எழுப்பவேண்டும்—சம உரிமை வழங்கப்பாடுபடும் நேர்மையாளர்க்கு ஊன்று கோலாக விளங்கவேண்டும்—டாக்டர் அம்பேத்காருக்கு ஆதரவாக அமையவேண்டும் — சட்டத்தை எதிர்த்துநிற்கும் எத்தர்களுக்கு அபாயக் குறியாகத் துலங்க வேண்டும். அத்தகையக் குரலைத் தீர்மானம் மூலம் எழுப்ப நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பீர்கள் உறுதுணையாக விளங்குவீர்கள் என்று கருதுகிறேன்.

உயில். உயில் எழுதாமல் வருகின்ற வாரிசுமுறை, அந்த வாரிசு முறைப்படி வருகின்ற ஜீவனாம்சஉரிமை, திருமணம், மக்கட்பேறு, நிரம்பாவயது பாதுகாப்பு, சுவீகாரம் ஆகிய இவைகளில் இந்தச்சட்டத்தால் பெண்ணினம் ஏமாற்றப்பட்டே வந்தது. இவைகளிலுள்ள குறைபாடுகள் சில இந்தத் திருத்தச் சட்டத்தால் போக்கப்படுகின்றன. ஆகவேதான் இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் நாம் நமது முழு ஆதரவையும் தருவோம், வாரீர் என்று உம்மை அழைத்தோம். அதற்கு மதிப்பு கொடுத்து நீங்களும் வந்துள்ளீர்கள்.

பலருடைய அபிப்பிராயத்தைக் கேட்க இந்திய சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார் 20—4—50ல் புது டில்லியில் மாநாடு கூட்டியுள்ளார். அந்த மாநாட்டுக்கு நமது கருத்தைத் தெரிவித்து, நமது முழு ஆதரவைக் காட்டுவதற்கான வகையில் தீர்மானம் ஒருமித்த முடிவுடன் நிறைவேற்றக் கோருகிறேன்.

நெருக்கடியான நேரத்தில் நாம் கூடியுள்ளோம். நம்மை வழியில் நடத்திச்செல்வதற்கு ஏற்றத் தலைவராக, நாடறிந்த தோழியர் மூவலூர் இராமமிர்தத்தம்மையார் அவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளோம். அவர்கள் ஆழ்ந்த அறிவும் பரந்த நோக்கமும், நீண்டகாலப் பொது வாழ்க்கை அனுபவமும்கொண்டு பெண்களின் விடுதலைக்குப் போராடி வருபவராவார்கள். பல தியாகத் தழும்புகளை ஏற்றவர்கள் சிறைக்கஞ்சாமல் செயலாற்றி மக்கள் விடுதலைக்கு அல்லும் பகலும் போராடிவரும் பண்புடையவராவார்கள். அவர்கள் தலைமையேற்க இசைந்தது பெரிதும் மகிழ்ச்சிக்குரியதாகும். அவர்களை வருக வருக என வரவேற்கிறேன்.

மாநாட்டைத் திறந்து வைக்க இசைந்து, தம் முழு ஆதரவையும்தந்துவமுன்வந்த தோழியர் வெற்றிச்செல்வி அன்பழகன் அவர்களையும் வருக வருக என வரவேற்கிறேன். அவர்கள் ஆர்வமுடன் பெண் விடுதலைக்குப் பாடுபடுபவர்கள். இளம் பெண்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாவார்கள்.

இறுதியாக எல்லோரையும் மீண்டும் ஒருமுறைவரவேற்று உங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் தந்து மாநாட்டை வெற்றிகரமாக நடத்தித்தரும்படி வேண்டிக் கொள்கிறேன்.

வாழ்க பெண்களின் விடுதலை எழுச்சி!

வெல்க அவர்தம் முயற்சி!!

நிறைவேறுக இந்து சட்டத் திருத்த மசோதா!!!

## தி. மு. க. தலைமை நிலைய கட்டட நிதி

| | ரூ. அ. பை. |
|---|---|
| முன் வரவு | 438-0-0 |
| டி. சண்முகம், திருவொற்றியூர் | 10-0-0 |
| ஏ. ஆர். சேஷாசலம், சென்னை | 1-0-0 |
| வி. சந்தானம், சென்னை | 1-0-0 |
| மோஹன், சென்னை | 0-8-0 |
| ராமானுஜம், சென்னை | 0-8-0 |
| அ. சித்தி, துறையூர் | 1-0-0 |
| தி. மு. க.—சமயநல்லூர் கிளை | 10-0-0 |
| சே. அனந்தராசு, கொளத்தூர் | 5-0-0 |
| ஜி. சதாசிவம் „ | 5-0-0 |
| தி. மு. க இளைஞர்கள், டால்மியாபுரம் | 5-0-0 |
| பு. ந. பலராமன், ஆரணி | 2-0-0 |
| ஓ கண்ணன், ஆரணி | 1-0-0 |
| | 479-0-0 |

### பழங்கால ஏடுகளைப் படித்தறிய வழி

லண்டன், ஏப். 13—

சாண்டர்ஸ் திட்டலில் உள்ள புத்தகசாலையில் எவ்வளவோ பண்டைக்கால கையெழுத்துப் பிரதிகள் எழுதப்பட்ட இடம் மறைந்துபோயிருக்கிறது. தற்போது ஆறு அல்ட்ரா வயலெட் விளக்குகள் மூலம் இந்த மறைந்த எழுத்துக்கள் காண முடிகிறதென்று கூறப்படுகிறது.

### இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்பு

#### தீர்மானம் நிறைவேற்றிய கழகங்கள்

(தொடர்ச்சி)

திருத்தங்கல்
கடம்பூர்
மேலக்கோட்டையூர்
ஆம்பூர்
ஆம்பூர்—உட்கிளை
கம்பா
மதுராந்தகம்
ஆற்காடு
புதுப்பாளையம்
மேலப்பழுவூர்
வடுகபட்டி
தாத்தையங்கார்பேட்டை
பொத்தனூர்
நாகூர்
சேப்பாக்கம் (சென்னை)
கோரநாட்-மாயூரம்
காரைக்குடி
அம்மன்கோயில்-சென்னை
நுங்கம்பாக்கம்
சென்னிமலை
புதுச்சேரி
திருவத்திபுரம்-(வ-ஆ)
ஆத்தூர்
மங்கநல்லூர்
சென்னை மா. தி. மு சழகம்

#### மற்றைய கழகங்கள்

பொன்மலை-தி. வா. கழகம்
ராயபுரம்-நே வா. மு. கழகம்

### நாட்டு விடுதலையில்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

படும் ஆகையால், மேற்படி மசோதாவை இம்மாநாடு வரவேற்று ஆதரிப்பதுடன், மசோதாவை விரைவில் சட்டமாக்கும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது

முன்; தோழியர் எம். ராஜம் பின்: தோழியர் ஜி. நாகரத்தினம் கோவிந்தசாமி.

4 பிற்போக்குவாதிகளும், வைதீகர்களும், மதம் கெட்டுவிடும் என்ற போலிக் கூச்சலிட்டு, இம்மசோதாவை எதிர்க்கும் செயலானது, பெண்குலத்துக்கு இழைக்கப்படும் துரோகச்செயல் என்று கருதுவதுடன், அத்தகைய பிற்போக்காளரின் செயலை வன்மையாகக் கண்டிக்கிறது.

முன்: தோழியர் ஆர். ருக்மணி அம்மாள், பின்: தோழியர். ராஜம்.

5 நெடுங்காலமாகப் பெண்குலத்துக்கு இழைக்கப்பட்டு வந்தக்கொடுமைகளை ஓரளவுக்கேனும் நீக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள இம்மசோதாவை, பிற்போக்குக் கும்பலின் கூச்சலுக்காக வேண்டி, திருத்தவோ, தாமதப்படுத்திவைக்கவோ கூடாது என்று சர்க்காருக்கு இம்மாநாடு வலியுறுத்திக் கூறுகிறது.

முன்: தோழியர் ஞானமணி பின்: தோழியர் அலர்மேலம்மாள்.

6. பெண்களின் இன்றைய தாழ்நிலைக்குக் காரணம், பழங்காலசம்பிரதாயங்களும், மூடப்பழக்க வழக்கங்களும் என்று இம்மாநாடு கருதுவதால், அவ்வித நிலைமைக்கு உயிரூட்டும் புராணப் பிரசாரத்தை எதிர்த்துப் போராடி, பெண்குலத்தின் மேம்பாட்டுக்காக அறிவுப் பிரசாரம் நடத்துவது என்று தீர்மானிக்கிறது.

முன்: தோழியர் ராஜாமணி அம்மாள். பின்: நாகரத்தினம் கோவிந்தசாமி.

### குத்துச்சண்டைவீரரின் சுயசரிதை

லண்டன், ஏப். 13—

40 ஆண்டுகளுக்கு முன் 'ரஷ்ய சிங்கம்' என்று பெயர் பெற்றிருந்த குத்துச்சண்டை புகழ் ஜியார்ஜ் ஹாக்கென்ஸ்மிட் தன் சுயசரிதையை எழுதியிருக்கிறார்.

# நாடெங்கும் அழகிரி நினைவு நாள்

## குளிசிலாபட்டு

குளிசிலாப்பட்டு, மார்ச் 30—

28-3-50 ம் தேதி தி. மு. கழகத்தின் சார்பாக அழகிரி நினைவுநாள் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் தோழர் கே. சம்பந்தம் அவர்கள் தலைமை தாங்கினார். தோழர்கள் சு. பாலன், மணிமொழி, ஆர். மணி, பொய்யாமொழி ஆகியவர்கள் அழகிரியின் தொண்டைப் பற்றியும், தி. மு. கழகக் கொள்கைகளைப்பற்றியும் சொற்பொழிவாற்றினர். பின் செயலாளர் தோழர் கே. எம். பாலசுப்ரமணி நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

## மானூர்

மானூர், ஏப். 30—

28-3-50 அன்று மாலை தி. மு. கழக சார்பில் மறைந்த மாவீரர் அழகிரி நினைவுநாள் தோழர் என். என். அப்பன் அவர்கள் தலைமையில் நடந்தது.

தோழர் இரெ. கரிகாலன் அவர்கள் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார்.

அடுத்துத் தோழர் அ. தமிழரசு பேசினார்.

பின் கழகச் செயலாளர் சு. முத்துக்குமார் அழகிரியின் தொண்டு குறித்துப் பேசியபின் நன்றி கூறிய கூட்டம் இனிது முடிவுற்றது.

## திசையன் விளை

திசையன் விளை, ஏப் 10—

9—4—50 அன்று மாலை 6 மணிக்கு தி. மு. கழகக் கட்டிடத்தில் அழகிரி நினைவு நாள் தோழர் வா. சொக்கலிங்கம் தலைமையில் கொண்டாடப்பட்டது. அழகிரியின் வாழ்க்கை வரலாறு பற்றி பல தோழர்கள் பேசிய பின் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிலையைக் கழகக் கட்டிடநிதிக்கு நன்கொடை வசூலித்து அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டது.

## கூறைநாடு

கூறைநாடு, ஏப். 10—

தி. மு. கழகத்தின் சார்பில், தோழர் இரெ. ஜோசப் அவர்கள் இல்லத்தில் 1—4—50 அன்று மாலை அழகிரி நாள் கொண்டாடப்பட்டது. அதுபோது மறைந்த மாவீரன் அழகிரியின் உழைப்பைப் பற்றியும், அவர்தான் மேற்கொண்ட கொள்கைக்காக இறுதிவரைப் போராடிய வரலாற்றைப்பற்றியும் பல தோழர்கள் பேசினர். நகரின் பல பகுதிகளிலும் அழகிரியின் குறிப்பைக்கொண்ட சுவரொட்டிகள் விளம்பரம் ஒட்டப்பட்டது.

## வேலாயுதபுரம்

கோவில்பட்டி, ஏப். 10—

கோவில்பட்டி:—இந்நகர் வேலாயுதபுரம் தெரு, நகர உட்கிளையில் 9—4—50 அன்று செயற்குழுக் கூட்டம் கூடி, மறைந்தமாவீரன் அழகிரியின் நினைவுநாள் கொண்டாடப்பட்டது. தி. மு. கழகக் கொடியைத் தோழர் ஆ. சோசப் ஏற்றிவைத்தார். பின்னர் செயலாளர் தோழர் சி. பால்ராசு, அவர்கள் நம் திராவிடநாட்டுக்கு அழகிரியைப் போன்ற வீரர்கள் தேவை என்று பேசி முடிக்க, கூட்டம் இனிது முடிந்தது.

## டம்பை

டம்பை, ஏப். 10—

நாவலடி 75என் உள்ள இல்லத்தில் 9—4—50 இரவு அழகிரிசாமி நினைவு நாள் கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்கு தோழர் ஆர். வி. சங்கர் அவர்கள் தலைமை வகித்தார். அதுபோது தோழர் ஏ. என். கேசவன் அவர்கள் மாவீரன் அழகிரிசாமி தொண்டு பற்றி விளக்கமாக சொற்பொழிவாற்றினர்.

முடிவில் தோழர் ஆர். வி. சங்கர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

## சேப்பாக்கம்

சென்னை, ஏப். 9—

9—4—50 அன்று பகல் செயற்குழுவினர் கூட்டம் தென்மொழிப் புலவர் தோழர் கா. அப்பாதுரை அவர்கள் தலைமையில் கூடியது. தலைவர் மிகவும் உருக்கமாய் அஞ்சா நெஞ்சன் அழகிரியைப்பற்றி சொற்பொழிவாற்றினார். அடுத்து தோழர்கள், நீலநாராயணன், கண்ணப்பன், தோழியர் அலமேலு அப்பாதுரை, தோழர்கள் தருமவேலு, கோ. சம்பந்தன், வாசு கோவிந்தன், குட்டியப்பன், எஸ். எல். ராமு, மற்றும் பலர் அழகிரியின் அரிய பணிகளைப்பற்றியும் வாழ்க்கையைப்பற்றியும் சொற்பொழிவாற்றினர். செயலாளர் எஸ். எல். ராமு நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

செயற்குழுவினர்கள் ரு 10 0-0 கட்டிட நிதிக்கு அளிக்க தீர்மானித்தனர்.

## சோமரசம்பேட்டை

சோமரசம்பேட்டை, ஏப். 10—

தி. மு. கழக சார்பாக 5-4-50 மாலை இவ்வூர் மண்டப மைதானத்தில் 'அழகிரி நினைவு நாள்' சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது.

பொதுக்கூட்டத்தில் தோழர் வி. எம். கணேசன் முன்மொழிய, தோழர் கே. எம். முத்துசாமி வழிமொழிய, தோழர் டாக்டர் ஏ ஜான் தலைமை வகித்தார். தலைவர் முன்னுரைக்குப்பின், தோழர்கள் தருமலிங்கம், இரா. துரைராசன் ஆகியோர் பேசினர்.

பின்னர் தோழர் பி. வி. சிற்றரசு நீண்ட நேரம் பேசினார்.

செயலாளர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

## கொண்டலம்பட்டி

ஒ. கொண்டலம்பட்டி, ஏப். 6—

4—4—50 அன்று அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி நினைவு நாள் கூட்டம் தோழர் மு. ராமன் அவர்கள் இல்லத்தில் தோழர் கே. எஸ். ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது தோழர்கள் கோபால், கே. எஸ். அமிர்தம், ஜி. கே. மூர்த்தி, கே. எம். கோவிந்தராசன் முதலியோர் அஞ்சாநெஞ்சனைப் பற்றியும் அவர் செய்த தொண்டு பற்றியும், விளக்கமாக சொற்பொழிவு ஆற்றினர். பின் செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

## மாயவரம்

மாயவரம், ஏப். 10—

நகர தி. மு. கழகச் சார்பில் 9—4—50 அன்று மாலை கழகக் கட்டிடத்தில், தோழர் ஏ. சாமிநாதன் தலைமையில் அழகிரி நினைவுநாள் கூட்டம் நடைபெற்றது. செயலாளர் தோழர் வை. மாணிக்கம் அவர்கள் "அஞ்சா நெஞ்சன் அழகிரியின் சிறப்புகள் பற்றியும், அவர் விட்டுச்சென்ற வேலையை நாம் தொடர்ந்து செய்யவேண்டியதின் அவசியம் குறித்தும் பேசினார். முடிவாக அன்னாருக்கு வீரவணக்கம் செலுத்த விழா இனிது முடிவுற்றது.

---

# கெய்ரோவுக்கு பாதாளரயில்

லண்டன், ஏப். 13—

கெய்ரோவுக்கு பூமிக்கடியில் நிர்மாணிக்க முடிவு செய்யப்பட்டு அயல்நாடுகளிலிருந்து டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன.

இது தவிர குகை ஒன்றைக் குடைந்து போடவும், 6000 வீடுகள் புது ரஸ்தாக்கள் போடவும் திட்டம் போடப்பட்டிருக்கிறது.

---

# 14—4—50 முதல்
## சென்னை - ஸாகர் & ஸயானியில்
## கோவிந்தன் & கம்பெனியாரின்
# மருதநாட்டு இளவரசி

தினசரி 3 காட்சிகள் 2-45, 6, & 9-30

மேல் இரண்டு வகுப்பு டிக்கட்டுகளை இரு தியேட்டர்களிலும் பிரதிதினமும் காலை 9-மணி முதல் 12-மணி வரை முன்னதாக வாங்கிக்கொள்ளலாம்

## கோவிந்தன் & கம்பெனி,
## மதருஸ் - 15

---

# ரஷ்யா-கிழக்கு ஜெர்மனி ராணுவ உடன்படிக்கை

பெர்லின், ஏப். 13—

ரஷ்யாவுக்கும் கிழக்கு ஜெர்மனிக்குமிடையே ராணுவ உதவி உடன்படிக்கை ஏற்படுவது அநேகமாக சாத்யம் என்று சோவியத் அதிகாரிகள் கூறுகின்றனர்.

மேற்கு ஜெர்மனி அட்லாண்டிக் ஒப்பந்தத்திலும் ஐரோப்பிய கவுன்சிலும் சேரும் பட்சத்தில் கிழக்கு ஜெர்மனி-ரஷ்யா உடன்படிக்கை கட்டாயம் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது.

புடாபெஸ்டில் நடைபெற்ற காமின்பாரம் நாட்டில் ரஷியா கிழக்கு ஜெர்மனி பாஸ்பா உடன்படிக்கை விவரமாக ஆலோசிக்கப்பட்டதென்று ஒரு ரஷ்ய அதிகாரியே ஒப்புக்கொள்கிறார்.

(ருசோம்)

---

# டிரீஸ்டேயின்எதிர்காலம்

ரோம், ஏப். 13—

ஐரோப்பாவில் வெடி குண்டு போன்றது என்று ஒரு சமயம் வருணிக்கப்பட்ட டிரீஸ்டேயின் எதிர்காலம் விஷயமாக ரஷ்யா தன் கொள்கையை மாற்றிகொள்ளலாம் என்று இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ரோமிலுள்ள ரஷ்ய தூதவர் டிரீஸ்டேட் விஷயமாக இதாலிய அயல்நாட்டு மந்திரியுடன் நீண்ட நேரம் சம்பாஷித்ததாகத் தெரிய வருகிறது.

டிரீஸ்டேவிஷயத்தில் இதாலிக்கு உரிமையுண்டு என்று 194?-ல் பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் அங்கீகரித்ததை ரஷ்யா ஏற்கலாம் என்று வதந்திகள் கூறுகின்றன.

---

# கயாவில் பிரார்த்தனை மண்டபம்

பாட்னா, ஏப். 13—

கயாவில் காந்திஜியின் ஞாபகார்த்தமாக சர்வ மதத்தினரும் வந்து பிரார்த்தனை நடத்த ஒரு மண்டபம் கட்ட திட்டம் போட்டிருக்கிறது. இதற்கு ரு 15,4000 ஆகுமாம்.

இதற்காக ரு. 25000 நன்கொடையாக பீகார் சர்க்கார் கொடுத்திருக்கிறது.

இம் மண்டபத்தில் மகத காலத்திய சித்ர வேலைகள் இடம் பெறுமாம். பிரபல பீகார் ஓவியர் தோழர் உபேந்திர உபேதி இம்மண்டபத்தில் சித்திரங்களை எழுதும் பொறுப்பை ஏற்றிருக்கிறார்.

---

# திருட்டுக்குள் திருட்டு

லண்டன், ஏப். 13—

ஒரு காண்டினுள்ள ஐஸ் கிரீம், லெமனேட் திருடச் சென்ற இரு சிறுவர்களை வாசகர்கள் திருட்டுக்கு போய் விட்டனர்.

---

# ஆவடி டி. இ. தொழிலாளர் சங்கம்

ஆவடி டி. இ. தொழிலாளர் சங்க துணைத் தலைவரும், உதவி செயலாளரும் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளனர்.

1500 தொழிலாளர்கள் வேலை செய்யும், ஆவடி ஆர்ட்னன்ஸ் டிபோவை மூடுவதற்கு ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது இப்பொழுது உள்ளக்கை நெல்லிக்கனி. ஏற்கனவே பல நியாயமான வழிகளில், அதிகாரிகளுக்கும், மாகாண மத்திய சர்க்காருக்கு நமது மோசமான நிலைமையை எடுத்துரைத்தும் பாதுகாப்பு, தொழில் இலாக்கா மந்திரிகள் நம்கோரிக்கைகளுக்கு சிறிதும் செவி சாய்க்காதிருக்கிறார்கள் என்பது மிக்க வருந்தத்தக்கது.

முன்னமேயே இந்த டிபோவின் மூலம் தென்னிந்தியாவிலுள்ள அனேக ராணுவ முகாம்களுக்கு வேண்டிய சாமான்களை அனுப்பியும் மாகாணத்தில் சமாதானத்தை நிலவவும், முன்பு ஹைதராபாத் காஷ்மீர் சச்சரவுகளின்போது திறம்பட சமாளித்தும் டிபோவில் முக்கியத்வத்தை காட்டினோம்.

டிபோவை மூடுவதற்காக சாமான்களை ஏற்கனவே அனேக டிபோக்கள் உள்ள வட இந்தியாவிற்கு, தென்னிந்தியாவில் இம்மாதிரி ஒரு டிபோவும் இல்லாதிருக்க, மாற்றுவதனுடன், வளைத்துக்கொண்டு 1500 குடும்பங்களை, அநாதிஷ்டவிதிக்கு ஆளாக்குகிறார்கள். குடியரசு சர்க்கார், 3 முதல் 10 வருடங்களாக உழைத்து வந்த உண்மையான ஊழியர்களை இவ்வாறு கைவிடுதல் நியாயமா? வேலைக்குரிமை அளிக்கும் குடியரசு அரசியல் நிபந்தனைப்படி சோம்பித்திரிதல் பெருங்குற்றமாகும் இந்த அரசாங்கமே வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டுபண்ணினால் இதற்கும் பொறுப்பாளி யார்?

பொதுமக்களின் பெரும் ஆதரவை பெற்றுள்ளவர்களும் கிரமமான ஒழுங்குள்ள முறையில் நடத்தும் 1500 பேர்களாகிய நாங்கள்மனமுவந்து வேலை வசதிகள் உடையைக் கேட்கிறோம் தங்கள் வாழ்க்கைக்காக நீண்டகாலமாகப் போராடும் இந்த 1500 தொழிலாளர்களைக் காப்பாற்ற குடியரசு சர்க்கார் முன் வருமா?

டி. ஆர். ரங்கராஜன், உபதலைவர். எம். டி. ராகவன், உதவிச் செயலாளர்.

---

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர் மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரையைத் தருகிறது. சாம்பிளின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

G. பழனியப்ப முதலியார், மதுரை.

# இனி நடப்பவை

பம்பாய்:—தெ. இ. ஆதித்திராவிட மகாஜன சங்கத்தின் 10-வது ஆண்டுவிழா, 1950 ஏப்ரல் 15, 16, 17 நாள்களில் பம்பாய், தாராவி, கணேசர் ஆலய சமவெளியில் நடைபெறும்.

தோழர் கண்பதி தேவ்ஜி டப்பாசே அவர்கள் தலைமை வகிப்பார். தோழர் பூ. சாத்தசாரதி அவர்கள் விழாவினை தொடங்கிவைப்பார்.

* * *

சுரிவாபட்டணம்:— 16—4—50 அன்று மாலை 6 மணிக்கு சுரிவாப்பட்டணம் காட்டேஜுளத்தங்கரை "அர்ச்சுனன் பந்தலில்" பொதுக்கூட்டம் தோழர் அ. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் தோழர் என். வி. நடராசன் அவர்கள் சொற்பெருக்காற்றுவார்.

* * *

தென் கோவை (கடை வீதி வட்டாரம்) இவ்வூர் தி. மு. க. பொதுக் கூட்டம் 16—4—50 அன்று நடைபெறும். அதுபோது தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி சொற்பொழிவாற்றுவார்.

* * *

வேலூர் (வ. ஆ.):—16—4—50 காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில், நகர தி. மு. கழக கமிட்டிக் கூட்டம் நடைபெறும்.

* * *

இராஜசிங்பேட்டை, பெங்களூர்—அறிஞர் அம்பேத்கார் பிறந்த நாள் 16 4-50 ஞாயிற்றுக்கிழமை 4-மணிக்கு எஸ். எஸ். கே. சங்க (S. S. K. Sangha Hall) சொற்பொழிவு மன்றத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் தோழர் தி ரா. தர்மராசன் தலைமை வகிப்பார். தோழர்கள் ரா. மாணிக்கம், செ. முனிரத்தினம், இசைச்செல்வன், ஆ. கோபால், பொன். இளவழகன், ஆ. சண்முகம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்கள்.

* * *

ஆற்காடு:—இவ்வூர் ஆனந்தா நூல் நிலையக் கட்டிடத்தில் 16 4-50 மாலை 6 மணிக்கு தி. மு. மாணவர் கழக ஆண்டு விழா நடைபெறும். அதுபோது தோழர் கண்ணன் அவர்கள் தலைமை வகிப்பார். தோழர்கள் மணி பி. ஏ. (ஆனர்ஸ்), துரைசாமி பி. ஏ., புலவர் மணிஎழிலன், இளங்குமரன், ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். தோழியர் தமிழ்ச்செல்வி நாட்டுப் பாடல் பாடுவார்கள், தோழர் ஆ. சிதம்பரம் பி. ஏ. ஆண்டுவிழா அறிக்கையைப்படிப்பார்.

* * *

பொள்ளாச்சி:— 16—4—50 ஞாயிறன்று மாலை 6-30 மணி அளவில் தேர் நிலை வெளியில் தி. மு. கழகச் சார்பில், பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் எம். எஸ். சிவசாமி. இரா. சு. தங்கப்பழம் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

செங்கோட்டை:— தி. மு. க. வள்ளுவர் சொற்பயிற்சி மன்றக் கூட்டம் 16—4—50-ம் தேதி மாலை பரிவாசா இல்லத்தில் நடைபெறும். அதுபோது "திராவிடம் பிரிதல் அவசியமா?" என்னும் பொருள் பற்றி பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

திருச்சி:—(பெரிய கடைவீதி) உட்கிளை தி. மு. கழகச் செயற்குழுக்கூட்டம், கழக ஆக்கவேலை பற்றி ஆராயவிருப்பதால், 16-4 50 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சாமி அச்சகத்தில், கூடும்.

---

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMeri Chetty Street, Madras-1.